# ஸ்ரீ விநாயக ஜோதிடம்





இந்தியாவிலிருந்து வருகை தந்து பிரான்சில் தங்கியுள்ள மிகுந்த அனுபவமுள்ள பண்டித் அனுமான் சுவாமி அவர்கள் கைரேகைமூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகிறவை பற்றி விபரமாகக் கூறுவார்.

ஆயுள் பூஜை, லட்சுமி கடாட்சப்பூஜைகள், தொழில் – வியாபார லட்சுமீகர விடயமான பொருத்தம், விவாகப் பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பெண்பிள்ளைகள் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட் வழக்கு, உடல்நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், ஒன்றுகூடுதல், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு, செய்வினை, கண்திருஷ்டி போன்றவற்றிற்கான பரிகாரங்கள். இவற்றுடன் ஜாதகக் குறிப்பைக் கொண்டு எதிர்காலப் பலன்களைத் தெரிவித்தல், பரிகாரம் செய்தல், போன்றவற்றுடன் சிறியோருக்கு பாலகிரகயந்திரங்கள் செய்து கொடுக்கப்படும். ஒருமுறை வந்து உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுங்கள்.

**Sarl EUROP VIDEO & PHOTOS** ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில் முன்பாக
**75, rue Philippe de girard, 75018 - Paris, France.**
**Mo: La chapelle ou Stalingrad Tel: 06 99 62 26 46 / 06 99 76 71 13**
**HINDI, GUJRATI, ENGLISH AND TAMIL Opening Hours : 10.30am to 8.00pm all Days**


# சிறீலங்கா அடுத்த தேர்தலுக்கு தயாராகின்றது

நாடாளுமன்றத்தை விரைவில் கலைத்து பொதுத் தேர்தலொன்றினை சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நடத்த திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டின் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வியாழனன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா குற்றம்சாட்டியிருந்தார். செவ்வாக்கிழமை நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் நீதியான முடையில் இடம்பெறவில்லை என. எனினும் தேர்தல்கள் ஆணையாளர் ஏன் எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட தெரிவித்திருந்தார் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் இடம்பெற்றுள்ளதென.

ஜெனரல் சரத்பொன்சேகா அவருடன் சந்திப்புகளிலும், பிரசாரக் கூட்டங்களிலும் கலந்துகொண்ட சனத்தொகையை கண்டு தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார். அவரின் கூட்டங்களில் கலந்துகொண்டோர் குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இது ஒரு அரசியல் விடயம். அரசியல் தொடர்பான கவனமில்லைமையே இது எடுத்துக் காட்டுகிறது.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரம்சிங்க பெற்றுக்கொண்ட வாக்குகளை கூட சரத் பொன்சேகா பெற்றுக்கொள்ளவில்லை. இதுதொடர்பில் சந்தோசப்படுபவர் ரணில் விக்கிரமசிங்கதான். எனினும் அவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் 60 சதவீதமானோர் எமக்கு வாக்களித்துள்ளனர். ஏனைய வாக்குகள் திசைதிருப்பப்பட்டுள்ளது. இதுதொடர்பில் எமது அரசியல் ஆய்வுக்குழு ஆராயவுள்ளது. இது எமக்கு எதிர்காலத்தில் அவ்வாக்குகளையும் கவர உதவும்? என அவர் தெரிவித்தார்.

# போராட்டத்தின் உச்சமாக.....

இப்படியான சூழ்நிலையிலேதான் தலைவர் என்ன சொல்கின்றாரென்றால் நாம் தொடர்ந்து சிங்கள இனவெறி அரசினுடைய திட்டமிட்ட செயல்களாலே ஏமாற்றப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு உரிமைகள் அழித்தொழிக்கப்பட்ட சிங்கள இனவெறி அரசாங்கமானது தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றது. இதனை உலக நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும். இது ஒரு தேசிய இன எழுச்சிப் போராட்டம். இது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். நாட்டைத் துண்டாடுகின்ற ஒரு போராட்டம் என்று யாரும் இதைக் கொச்சைப்படுத்திவிடக்கூடாது. பயங்கரவாதிகள் என்று எம்மை எவரும் சொல்லக்கூடாது என நியாயங்களை உலக மக்களிற்கு எடுத்துச்சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் தேசியத் தலைவர் அவர்கள் 2008ம் ஆண்டு மாவீரர்நாள் உரையிலே இனி தனித் தமிழீழத் தனியரசை அமைக்கவேண்டிய பணி உலகத் தமிழர்களுடைய கைகளிலேயே இருக்கின்றது என்று கையளித்திருக்கின்றார். குறிப்பாக இளைஞர்களும் மாணவர்களும் பெருவாரியாகப் பங்கெடுத்து உலக நாடுகளுடைய ஆதரவைத் திரட்டுவதற்கும் நம்முடைய நியாயங்களை அவர்களிற்கு எடுத்துச் சொல்வதற்கும் நீங்கள் ஒரு வாய்ப்பாக உங்கள் உங்கள் நாடுகளிலே இருந்துகொண்டு, ஜனநாயக வழிமுறைகளிலே செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்று என்று கூறி கையளித்துள்ளார்.

2009ல் போரானது உச்சகட்டத்தை அடைகின்ற பொழுது ஏறத்தாழ இந்தியா, சீனா, ஈரான், பாகிஸ்தான் இப்படி இருபதிற்கும் மேற்பட்ட நாடுகள் நம்முடைய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இலங்கை அரசான சிங்கள இனவெறி அரசு ஒரு அரசிற்கு ஆதரவாக இவர்களுடைய நிலைப்பாடுகள், இவர்களுடைய செயற்பாடுகள் ஆயுத உதவி செய்வது, இராணுவத்திற்கு பயிற்சியளிப்பது, றாடார் போன்ற கருவிகளை வழங்குவது இதுபோன்ற உதவிகளைக் கூட இந்திய அரசாங்கம் செய்தது. இந்தியாவிலே நாங்கள் எல்லோரும்கூட கடுமையாக எதிர்த்துப் போராடினோம். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இலங்கை அரசிற்கு உதவிசெய்யாதே, இராணுவ உதவிசெய்யாதே என்றெல்லாம் கிராமத்திலுள்ள மக்களெல்லாம் எழுச்சிபெற்று வீதியிலே வந்து போராடினார்கள். தொடர்ந்து போராடினார்கள். இன்னும் சொல்லப்போனால் முத்துக்குமார் போன்ற மாவீரர்கள் தங்களுடைய தேகத்திலே தீயை மூட்டி தங்களை அழித்துக்கொண்டார்கள். எப்படியாவது போரை நிறுத்த வேண்டும். இந்தியா இலங்கையிலே போரை நிறுத்துவதற்கு முயலவேண்டும். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எங்களை நீங்கள் உண்மையிலேயே இந்தியக் குடிமகனாக ஏற்றுக்கொள்வது உண்மையென்றால் எங்களுடைய தொப்புள்கொடி உறவாக இருக்கக்கூடிய அந்தத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்ற பொழுது நீங்கள் சிங்கள அரசிற்கு ஆயுதங்களைக் கொடுத்து அவர்களை அழிக்கப் பார்க்காதீர்கள், நீங்கள் றாடார் கருவிகளைக்கொடுத்து அவர்களை அழிக்கப்பார்க்காதீர்கள். அவர்களிற்கு பல்வேறு உதவிகளைச் செய்தெல்லாம் அவர்களை அழிக்கப்பார்க்காதீர்கள் என்றுசொல்லி அனைத்துத் தரப்பு மக்களும் எழுச்சியோடு போராடினோம். 1983ல் கூட அப்படிப்பட்ட எழுச்சியை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் இந்த 2009ல் இந்த எழுச்சி கிராமங்களிலே அதாவது கல்லூரி, ஆசிரியர், மாணவர், அரச ஊழியர், வழக்கறிஞர் எல்லாத் தரப்பைச் சார்ந்தவர்களையும் பற்றிக் கொள்கின்றது. இந்தப் போரை நிறுத்த தமிழக மக்கள் கடுமையாகப் போராடினார்கள். ஆனால்...

*(அடுத்த இதழில் தொடரும்...)*

# தோட்டக்காரர் நாம்

அப்பனும் அம்மையும்
அவரடி முன்னவரும்
ஆக்கிவைத்த தோட்டத்தில்
கயமை வழிவாகிப்போன
கண்ட காவாலிப் பயல்களெல்லாம்
அறுவடை செய்துகொண்டுபோக
வழி தெருவில்
சிந்துண்டு சிதறுண்டு போவதை
பொறுத்தித்
தின்றுவாழும் வாழ்வும்
ஒரு வாழ்வோ..?

**– அராலியூர் கலைமகள்**



# மறைக்கப்பட முடியாத....

கள் நேரடியாக உரையாடியதில் இவற்றில் பெரும்பாலானவற்றிற்கு நேரடியாக அரசாங்கமே பொறுப்பாக இருந்தது வெளிப்பட்டது. மோதலின் போது படுகொலை மற்றும் காணாமல் போதலுக்கு அரச பாதுகாப்புப் படைகள் காரணமாக இருந்திருக்கின்றன. எனினும் இவை எவை குறித்தும் விசாரணைகள் நடாத்தப்படவில்லை.

இது தவிர போர்ப்பிராந்தியத்தில் பொதுமக்கள் மீதும் வைத்தியசாலைகள் மீதும் பாதுகாப்பு வலயத்திலிருந்த மக்கள் மீதும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை சிறீலங்காப் படையினர் நடாத்தியதையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையிட்டுள்ளது. அங்கிருந்து வெளியேறி வந்த மூன்று இலட்சம் மக்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மறுத்துக் கொண்டிருப்பதே சரியான நிலைப்பாடு என்று சிறீலங்கா அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அது தன் நன்மதிப்பை இழந்த வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸை மறுத்து விட்டது. சர்வதேச நாணய நிதியம் அவசரகால நிதியத்தை தாமதப்படுத்துகிறது. அமெரிக்க கொங்கிரஸ் மற்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சு என்பன இறுதி யுத்தத்தில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமையை அறிக்கையிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் 2009 மே மாதம் போர் முடிவடைந்தவுடன் இலங்கை சென்றிருந்த போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போர்க்குற்றங்கள் தொடர்பில் தாம் விசாரணை நடாத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் அளித்த அந்த உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை. இப்போது பந்து பான் கீ மூன் வசம் உள்ளது. ஒரு சுயாதீனமான சர்வதேச ரீதியான விசாரணையை நடாத்தி இலங்கையில் என்ன நடந்தது என்பது குறித்த உண்மையை அவர் வெளிக் கொண்டு வர வேண்டும். அங்கு நடைபெற்ற முக்கியமான போர்க்குற்றங்களை வெளிக்கொணர தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.